# நிறுத்திவைத்தல் வரி (நி.வை.வ - *WHT)* மற்றும்

# முற்பண வருமான வரி (மு.வ.வ. - *AIT)* என்பவற்றின் வருடாந்தக்கூற்றை பூரணப்படுத்துவதற்கான வழிகாட்டி

# *2023/2024* ஆம் வரிமதிப்பீட்டாண்டு

*2017* ஆம் ஆண்டின் *24* ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் (உள்நாட்டு இறைவரிச் சட்டம்) ஏற்பாடுகளுக்கு அமைவாக, ஒவ்வொரு **நிறுத்திவைத்தல் முகவரும், *2024*, ஏப்பிரல் *30* ஆம் திகதிக்கு முன்னர்** *2023/2024* ஆம் வரிமதிப்பீட்டாண்டிற்கான, அட்டவணைகளுடன் வருடாந்தக் கூற்றினை (**படிவம் இல. *Asmt WHT_001_T***), சமர்ப்பித்தல் வேண்டும்.

நி.வை.வ மற்றும் மு.வ.வ என்பவற்றின் வருடாந்தக் கூற்று மற்றும் அட்டவணைகளைச் சமர்ப்பிக்கும் போது பின்வருவனவற்றில் கவனம் செலுத்த வலியுறுத்தப்படுகின்றீர்கள்.

## *1.* நிறுத்திவைத்தல் வரி *(WHT)* மற்றும் முற்பண வருமான வரி *(AIT)* என்பவற்றின் கூற்று மற்றும் அட்டவணைகளை சமர்ப்பித்தல்

### *i.* கோப்பிடுதலுக்கான முறை

*2023* ஆம் ஆண்டின் *4* ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட *2017* ஆம் ஆண்டின் *24* ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் *113 (3)* ஆம் பிரிவின் பிரகாரம், *2023,* ஏப்பிரல் *1* ஆம் திகதி முதல் செயல்வலுப்பெறும் வகையில் ஆளொருவர் அவரது வரி விபரத்திரட்டுகளை கணனி முறைமை அல்லது கையடக்க தொலைபேசியைப் பயன்படுத்துவதன் மூலம் இலத்திரனியல் முறையில் கோப்பிடல் வேண்டும். உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் வலைதள முகப்பின் ஊடாக இ – கோப்பிடலுக்கான வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலதிக தகவல்களுக்கு இணைப்பு 1 (இ-சேவையினூடாக நி.வை.வ விபரத்திரட்டினை சமர்ப்பிப்பதற்கான வழிகாட்டி) இனைப் பார்க்கவும்.

இ – சேவை வசதி உங்களிடம் இல்லை எனில், அட்டவணைகளுடன் உங்கள் நி.வை.வ. மற்றும் மு.வ.வ. வருடாந்த கூற்றினை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் தலைமை காரியாலயத்தின் கீழ்த்தளத்தில் தாபிக்கப்பட்டுள்ள **"நனசல"** இல் உள்ள இ – சேவையை பயன்படுத்தி நீங்களே சமர்ப்பிக்கலாம் அல்லது ஏதேனும் உள்நாட்டு இறைவரித் திணைக்கள பிராந்திய அலுவலகத்தில் சமர்ப்பிக்கலாம்.

## *2.* நிறுத்திவைத்தல் வரி மற்றும் முற்பண வருமான வரிக் கூற்றினை பூர்த்தி செய்தல்

### *2.1* பகுதி *I* – நிறுத்திவைத்தல் வரி *(WHT)* கழிப்பனவுகளின் சுருக்கம்

பகுதி *I* - **வதிவற்றோருக்கு** மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் மீது **மற்றும் லொத்தர்/ பந்தயம்/ சூதாட்டத்திலிருந்தான வெகுமதிகளிலிருந்து அல்லது வெற்றித் தொகைகளிலிருந்து அல்லது**

**இரத்தினக்கல் ஏல விற்பனையிலிருந்து கழிக்கப்பட்ட** நிறுத்திவைத்தல் வரியின் விபரங்களைப் பதியவும்.

### *2.2* பகுதி *II* - முற்பண வருமான வரி *(AIT)* கழிப்பனவுகளின் சுருக்கம்

பகுதி *II* – **வதிவுள்ள நபர்களுக்கு** மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் மீது கழிக்கப்பட்ட நிறுத்திவைத்தல் வரி / முற்பண வருமான வரியின் விபரங்களைப் பதியவும் .

*குறிப்பு 1: நிறுத்திவைத்தல் முகவருக்கு வட்டி அல்லது பங்கிலாபம் தொடர்பில் வதிவுள்ள நபர் மற்றும் வதிவற்ற ஆளிற்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளை அடையாளம் காண்பதில் சிரமம் இருப்பின், அந்த நிறுத்திவைத்தல் முகவர் வதிவுள்ள மற்றும் வதிவற்ற ஆட்கள் என பிரிக்காது விபரத்திரட்டின் பகுதி II இல் மொத்த தொகையினை வெளிப்படுத்தலாம்.*

### *2.3* பகுதி *III* – மாதாந்தக் கொடுப்பனவின் சுருக்கம்

இந்த பிரிவில், கொடுப்பனவு குறியீடுகள் *43* மற்றும் *44* இன் கீழ் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு உங்களால் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு/கொடுப்பனவுகளின் விபரங்களுடன் நிறுத்திவைத்தல் வரி மற்றும் முற்பண வருமான வரியின் மாதாந்த பொறுப்பினை பகுதி *I* மற்றும் பகுதி *II* என்பவற்றுக்கு வெவ்வேறாக வெளிப்படுத்த தேவைப்படுத்தப்படுகின்றீர்கள்.

உங்கள் கூற்று மற்றும் அட்டவணைகளை சமர்ப்பிப்பதற்கு முன்னர் கீழ்வரும் நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டுள்ளனவா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

- *i.* கூற்றின் கூடு *IA (d) + IIA (d) =* கூற்றின் கூடு *IIIA (f)*
- *ii.* கூற்றின் கூடு *III (a) +* கூடு *III (c) =* அட்டவணை *1 (*கழிக்கப்பட்ட நி.வை.வரியின் தொகைக்கான கூடு*)*
- *iii.* கூற்றின் கூடு *III (b) +* கூடு *III (d) +* கூடு *III (e) =* அட்டவணை *2A (*கழிக்கப்பட்ட நி.வை.வரியின் தொகைக்கான கூடு*) +* அட்டவணை *2B (*கழிக்கப்பட்ட நி.வை.வரியின் தொகைக்கான கூடு*)*

### *2.4* பகுதி *IV* - வெளிப்படுத்துகை

**பகுதி *(A)***

கூற்று அல்லது கூற்றின் ஒரு பகுதியானது அங்கீகரிக்கப்பட்ட கணக்காளர் ஒருவரினால், அல்லது வரிசெலுத்துநரின் முழுநேர ஊழியர் தவிர்ந்த கொடுப்பனவுக்காக பிறிதொரு நபரினால் தயாரிக்கப்பட்டிருப்பின் பகுதி *(A)* இனைப் பூரணப்படுத்தி, அத்தகைய நபரினால் வழங்கப்பட்ட சான்றிதழ்/களை இணைக்கவும்.

**பகுதி *(B)* நிறுத்திவைத்தல் முகவரின் வெளிப்படுத்துகை**

உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் *126(4)* ஆம் பிரிவின் பிரகாரம், வரிசெலுத்துநர் அல்லது வரி செலுத்துநரினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட முகவர், கூற்றின் துல்லியம் மற்றும் பூரணத்துவம் தொடர்பில் சான்றுப்படுத்தி அதில் கையொப்பமிடல் வேண்டும். ஆகவே,

முகாமைத்துவ பணிப்பாளர்/ திணைக்களத் தலைவர்/ தலைவர் அல்லது செயற்பாட்டு பங்காளர்/ நிதிப் பணிப்பாளர்/ பணிப்பாளர்/ செயலாளர்/ நம்பிக்கைப் பொறுப்பாளர்/ கணக்காளர்/ நிருவாக உத்தியோகத்தர்/ பிரதான உத்தியோகத்தர்/முறையாக அதிகாரமளிக்கப்பட்டவர், வருடாந்தக் கூற்றின் பகுதி *IV* இன் பகுதி *(B)* இன் கீழ் அவரது பெயர் மற்றும் பதவி பெயர் என்பவற்றை குறிப்பிட்டு வருடாந்தக் கூற்றில் கையொப்பமிடல் *(*மற்றும் திகதியிடல்*)* வேண்டும்.

## *3.* நிறுத்திவைத்தல் வரி அட்டவணைகளை பூரணப்படுத்துதல்

### *3.1* நிறுத்திவைத்தல் வரி அட்டவணை *1 (*வதிவுள்ள ஆட்களுக்கான வட்டி அல்லது தள்ளுபடி மீதான நிறுத்திவைத்தல் வரி

இந்த அட்டவணை வட்டி அல்லது தள்ளுபடி கொடுப்பனவு மீது நி.வை.வ/மு.வ.வ கழித்த ஆளினால் பூரணப்படுத்தப்படுதல் வேண்டும். பதிவுகளின் எண்ணிக்கை மாதமொன்றுக்கு 25,000 இனை விஞ்சுமாயின் அட்டவணைகள் மாதம்தோறும் தயாரிக்க தேவைப்படுத்தப்படுகின்றீர்கள்.

***குறிப்பு II : வங்கி மற்றும் நிதி நிறுவனங்களுக்கு,***

*2023.07.26 ஆம் திகதிய SEC/2023/E/05 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நீங்கள் 2023.12.31 வரையில் அட்டவணை 1 உடன் உங்கள் காலாண்டு கூற்றினை ஏலவே கோப்பிட்டுள்ளீர்கள் எனில், 2024, சனவரி 1 முதல் 2024, மார்ச் 31 வரையிலான காலப்பகுதிக்கான அண்மித்த இறுதி காலாண்டிலிருந்தான தகவல்களை மட்டும் உள்ளடக்கி அட்டவணையை சமர்ப்பிக்கலாம்.*

***குறிப்பு III*** *: அட்டவணை 1 இல் பதிவுகளின் எண்ணிக்கை 100,000 இனை விஞ்சுமாயின், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்தான அனுமதிக்குட்பட்டு, ரமீஸ் முறைமைக்கு அட்டவணைக் கோப்பினை மாற்றீடு செய்வதற்கான நேரடி மாற்றீட்டினைப் பயன்படுத்தலாம். இம் முறைமையினை பயன்படுத்துவதற்கு 2024, ஏப்பிரல் 10 ஆம் திகதிக்கு பிந்தாது ஆணையாளர் நாயகத்தின் அனுமதிக்கு கோரிக்கை ஒன்றினை சமர்ப்பித்தல் வேண்டும். எவ்வாறாயினும், ரமீஸ் முறைமைக்கு கோப்பினை மாற்றீடு செய்வதற்கு முன்னர், ஏற்புடைய அட்டவணை சரிபார்க்கும் கருவியினை பயன்படுத்தி பதிவுகளை சரிபார்த்தல் அத்தியாவசியமானதாகும்.*

1. ***தொடர் இலக்கம்*** – தொடர் இலக்கம் *1* இலிருந்து ஆரம்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் ஒரே இலக்கம் எச் சந்தர்ப்பத்திலும் மீண்டும் பாவிக்கப்படுதல் கூடாது. ஒன்றுக்கு மேற்பட்ட கோப்புப் பதிவு தயாரிக்கப்படின் *(*போதுமான கொள்ளளவு இல்லாவிடின் *(*அதாவது கோப்பின் கொள்ளளவு*(capacity) 10 MB* இனை விட அதிகமாயின்*))*, அடுத்த பதிவானது தொடர் இலக்கங்களின் சரியான தொடர்ச்சியை கொண்டிருத்தல் வேண்டும்.
2. ***வரி வகை (நி.வை.வ / மு.வ.வ) -*** தொடர்புடைய வரி வகையை தெரிவு செய்யவும் *(*நி.வை.வ / மு.வ.வ*)*

3. ***முதலீட்டு வகை*** – கீழே தரப்பட்ட நிரலில் இருந்து ஏற்புடைய முதலீட்டு வகையினை தெரிவு செய்யவும்

   வியாபாரக் கடன்
   வைப்புச் சான்றிதழ்
   வணிகப் பத்திரங்கள்/வாக்குறுதிப் பத்திரங்கள்
   தொகுதிக்கடன்
   நிலையான வைப்பு
   வெளிநாட்டு நாணய கணக்கு
   நிதியங்களில் முதலீடு
   வதிவற்ற வெளிநாட்டு நாணயம்
   ஏனையவை
   சேமிப்புகள்
   முறிகள்/ உண்டியல்கள்/பிணைப்பொறுப்புகள்

4. ***நிறுத்திவைக்கப்பட்டவரின் பெயர்*** – நிறுத்திவைக்கப்பட்டவரின் பெயர் **ஆங்கிலத்தில்** குறிப்பிடப்படுதல் வேண்டும். அதிகபட்ச சொற்கள் 100 ஆக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
5. ***நிறுத்திவைக்கப்பட்டவரின் முகவரி*** – நிறுத்திவைக்கப்பட்டவரின் முகவரி ஆங்கிலத்தில் குறிப்பிடப்படுதல் வேண்டும். அரைக்கால் புள்ளிகள், எந்த சந்தர்ப்பத்திலும் பயன்படுத்தல் கூடாது, அதற்கு பதிலாக, இரண்டு சொற்களுக்கிடையில் இடைவெளி விடவும். அதிகபட்ச சொற்கள் *100* ஆக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
6. ***நிறுத்திவைக்கப்பட்டவரின் வ.அ.இ./தே.அ.அ.****(TIN/NIC)* – நிறுத்திவைக்கப்பட்டவரின் செல்லுபடியாகும் வரிசெலுத்துநர் அடையாள இலக்கம்/தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் குறிப்பிடவும். நிறுத்திவைக்கப்பட்டவர் வ.அ.இலக்கத்தை/தே.அ.அ. இலக்கத்தை குறிப்பிடவில்லை எனில் இக்கூட்டினை வெறுமையாக விடுங்கள்.

*குறிப்பு IV – பதிவிறக்கப்பட்ட excel இல் தே.அ.அ. நிரலானது உரைமூலமாக்கப்பட்டுள்ளது (formatted as text). தே.அ.அ இனை பிரதி செய்து ஒட்டியிருந்து (copy & paste), அது விஞ்ஞான முறைமையில் (scientific format) காணப்பட்டால் அந் நிரலினை தசமங்கள் இன்றி முறைபடுத்துவதனை உறுதி செய்யவும்.*

i. *உள்நாட்டு இறைவரி திணைக்கள வலைதளத்திலிருந்து அட்டவணையை பதிவிறக்கம் செய்துகொள்ளவும்.*
ii. *12 இலக்க தே.அ.அ. இனை சேர்க்கவும்.*
iii. *csv. ஆக கோப்பினை பதியவும் (save). கோப்பினை திறக்க வேண்டாம்.*
iv. *முறைமையில் கோப்பினை பதிவேற்றம் செய்யவும்*
v. *கோப்பினை பதிந்த பின்னர் அதனை திருத்த வேண்டுமாயின், csv கோப்பினை திறக்கவும்.*

vi *தே.அ.அ. நிரலினை தசமங்களின்றிய இலக்கமாக மாற்றவும். (நோட்பாடிலிருந்து (Notepad) பதியப்பட்ட csv கோப்பினை திறந்து அதிலுள்ளவற்றை நீங்கள் சரிபார்க்கலாம்)*

vii *கோப்பினை .csv ஆக பதியவும். கோப்பினை திறக்க வேண்டாம்.*

viii *முறைமையில் கோப்பினை பதிவேற்றம் செய்யவும்*

7. ***கணக்கு இல./சான்றிதழ் இல.*** – கணக்கு இலக்கம் அல்லது சான்றிதழ் இலக்கத்தை குறிப்பிடவும். அத்தகைய இலக்கம் *30* இலக்கங்களை விஞ்சுதல் ஆகாது. .
8. ***முதலீட்டின் பெறுமதி (ரூபா)*** – இந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு வட்டி செலுத்தப்படும் முதலீட்டின் முக மதிப்பை குறிப்பிடவும். இக் கூடு *2* தசமங்கள் அடங்கலாக அதிகபட்சம் *15* இலக்கங்களை மட்டும் கொண்டிருத்தல் வேண்டும்..
9. ***கொடுப்பனவு செய்யப்பட்ட வட்டி/தள்ளுபடியின் பெறுமதி (ரூபா)*** – இந்த வரிமதிப்பீட்டாண்டில் செலுத்தப்பட்ட வட்டியின் பெறுமதி இங்கே உள்ளடக்கப்படுதல் வேண்டும். வட்டி காலத்திற்கு காலம் செலுத்தப்பட்டிருப்பின், ஒவ்வொரு காலப்பகுதிக்கும் செலுத்தப்பட்ட வட்டி தனித்தனியாக வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். இக் கூடு அதிகபட்சம் *15* இலக்கங்களை மட்டும் கொண்டிருத்தல் வேண்டும் *(2* தசமங்கள் அடங்கலாக*)*.
10. ***நி.வை.வ / மு.வ.வ வீதம்****(%)* – நிறுத்திவைத்தல் வரி/ முற்பண வருமான வரி கழிப்பதில் பிரயோகிக்கப்பட்ட வரி வீதம் இங்கே குறிப்பிடப்படுதல் வேண்டும்.
11. ***கழிக்கப்பட்ட நி.வை.வரித் / மு.வ.வரித் தொகை (ரூபா)*** – கழிக்கப்பட்ட நிறுத்திவைத்தல் வரியின்/ முற்பண வருமான வரியின் பெறுமதி இங்கே குறிப்பிடப்படுதல் வேண்டும். இக் கூடு அதிகபட்சம் *15* இலக்கங்களை கொண்டிருத்தல் வேண்டும். *(2* தசமங்கள் அடங்கலாக*)*.
12. ***கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட மாதம்*** – கீழ் இறங்கும் நிரலில் *(dropdown list)* இருந்து ஏற்புடைய மாதத்தை தெரிவு செய்யவும்.
13. ***நி.வை.வ/மு.வ.வ சான்றிதழ் இலக்கம்*** – நிறுத்திவைக்கப்பட்டிருப்பவருக்கு உங்களால் வழங்கப்பட்ட நிறுத்திவைத்தல் வரி / முற்பண வருமான வரி சான்றிதழின் இலக்கம்/களை இங்கே குறிப்பிடவும். இந்த கூடு அதிகூடியதாக *30* இலக்கங்களை மாத்திரமே கொண்டிருத்தல் வேண்டும்.

    நிறுத்திவைக்கப்பட்டவருக்கு நி.வை.வ/ மு.வ.வ. சான்றிதழை நீங்கள் வழங்கவில்லை எனில், இக் கூடு வெறுமையாக இருத்தல் வேண்டும்.
14. ***மொத்தம்*** – நிரல் *10* இன் கூட்டுத் தொகை இங்கே குறிப்பிடப்படுதல் வேண்டும்.

### *3.2* நிறுத்திவைத்தல் வரி அட்டவணைகள் *2A* மற்றும் *2B*

வதிவுள்ளவர்கள் மற்றும் வதிவற்றவர்கள் மீதான வட்டி, தள்ளுபடி தவிர்ந்த *84* மற்றும் *85* ஆம் பிரிவுகளின் கீழ் கழிக்கப்பட்ட நிறுத்திவைத்தல் வரியானது முறையே *2A* மற்றும *2B* ஆம் அட்டவணையில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்

**அட்டவணை** *2A* – வதிவுள்ள ஆளொருவருக்கு மேற்கொள்ளப்பட்ட வட்டி அல்லது தள்ளுபடி தவிர்ந்த ஏனைய கொடுப்பனவுகள்

**அட்டவணை** *2B* **–** வதிவற்ற ஆளொருவருக்கு மேற்கொள்ளப்பட்ட வட்டி அல்லது கழிப்பனவு தவிர்ந்த கொடுப்பனவுகள்

1. ***தொடர் இலக்கம்*** – தொடர் இலக்கம் *1* இலிருந்து ஆரம்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் ஒரே இலக்கம் எச் சந்தர்ப்பத்திலும் மீண்டும் பாவிக்கப்படுதல் கூடாது. ஒன்றுக்கு மேற்பட்ட கோப்பு பதிவு தயாரிக்கப்படின் *(*போதுமான கொள்ளளவு இல்லாவிடின் *(*அதாவது கோப்பின் கொள்ளளவு *10 MB* இனை விட அதிகமாயின்*)),* அடுத்த பதிவானது தொடர் இலக்கங்களின் சரியான தொடர்ச்சியை கொண்டிருத்தல் வேண்டும்.
2. ***வரி வகை (நி.வை.வ/ மு.வ.வ) -*** *தொடர்புடைய வரி வகையை தெரிவு செய்யவும்.(நி.வை.வ/ மு.வ.வ)*
3. ***கொடுப்பனவு வகை*** – கீழே தரப்பட்ட நிரலில் இருந்து ஏற்புடைய கொடுப்பனவு வகையினை தெரிவு செய்யவும்.

   விதிப்பனவு
   தரகு
   ஆலோசனைகள்
   பங்கிலாபம்
   இரத்தினக்கல் ஏலம்
   வதிவற்றவர்களுக்கு தரை, கடல் அல்லது ஆகாய வழி போக்குவரத்து அல்லது தொலை தொடர்பு சேவைக்கான கொடுப்பனவு
   முகாமைத்துவ சேவைக் கட்டணம்
   இயற்கை வள கொடுப்பனவு
   ஏனையவை
   காப்புறுதி கட்டுப்பணங்கள்
   வாடகை
   அரசுரிமைப் பணம்
   சேவைக் கட்டணம்
   கற்பித்தல் அல்லது விரிவுரையாற்றல்
   தொழில்நுட்ப கட்டணம்
   ஏனைய தானியங்கு சேவை அடிப்படையில் வழங்கப்பட்ட எந்தவொரு சேவை மீதான கொடுப்பனவு
   லொத்தர்/வெகுமதி/பந்தயம் அல்லது சூதாட்டத்திலிருந்தான வெற்றித் தொகைகள்
4. ***நிறுத்திவைக்கப்பட்டவரின் பெயர்*** – நிறுத்திவைக்கப்பட்டவரின் பெயர் **ஆங்கிலத்தில்** குறிப்பிடப்படுதல் வேண்டும். அதிகபட்ச சொற்கள் *100* ஆக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

5. *(அ).**நிறுத்திவைக்கப்பட்டவரின் முகவரி*** – நிறுத்திவைக்கப்பட்டவரின் முகவரி ஆங்கிலத்தில் குறிப்பிடப்படுதல் வேண்டும். அரைக்கால் புள்ளிகள், எந்த சந்தர்ப்பத்திலும் பயன்படுத்தல் கூடாது,

அதற்கு பதிலாக, இரண்டு சொற்களுக்கிடையில் இடைவெளி விடவும். அதிகபட்ச சொற்கள் *100* ஆக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

*(ஆ).**நிறுத்திவைக்கப்பட்டவரின் நாடு** (*அட்டவணை *2B* இற்குரியது*)* – நிறுத்திவைக்கப்பட்டவரின் வதிவிட நாட்டை உள்ளடக்கவும்.

*6. **நிறுத்திவைக்கப்பட்டவரின் வ.அ.இ. / தே.அ.இ.*** – நிறுத்திவைக்கப்பட்டவரின் செல்லுபடியாகும் வரிசெலுத்துநர் அடையாள இலக்கம் அல்லது தேசிய அடையாள இலக்கத்தை குறிப்பிடவும். நிறுத்திவைக்கப்பட்டவர் வ.அ.இ. அல்லது தே.அ.இலக்கத்தை குறிப்பிடவில்லை எனில் இக்கூட்டினை வெறுமையாக விடுங்கள்.

(*குறிப்பு iV இனை பார்க்கவும்.*)

*7.. **கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட மாதம்*** – கீழ் இறங்கும் நிரலில் *(dropdown list)* இருந்து ஏற்புடைய மாதத்தை தெரிவு செய்யவும்.

*8.. **கொடுப்பனவு செய்யப்பட்ட மொத்த தொகை*** – நிறுத்திவைக்கப்பட்டவருக்கு வழங்கப்பட்ட வரி சான்றிதழுக்கு/சான்றிதழ்களுக்கு அமைவாக கொடுப்பனவு செய்யப்பட்ட *(*வரி அடங்கலாக*)* மொத்த பெறுமதி இங்கே குறிப்பிடப்படுதல் வேண்டும். இக் கூடு அதிகபட்சம் *15* இலக்கங்களை கொண்டிருத்தல் வேண்டும். *(2* தசமங்கள் அடங்கலாக*).*

*9. **நி.வை.வ/ மு.வ.வ வீதம்** (%)* – நிறுத்திவைத்தல் வரி/ முற்பண வருமான வரி கணிப்பதில் பிரயோகிக்கப்பட்ட வரி வீதம் இங்கே குறிப்பிடப்படுதல் வேண்டும்.

*10. **கழிக்கப்பட்ட நி.வை.வரித்/ மு.வ.வரித் தொகை (ரூபா)*** – கொடுப்பனவுகளிலிருந்து கழிக்கப்பட்ட நிறுத்திவைத்தல் வரியின்/ முற்பண வருமான வரியின் பெறுமதி இங்கே குறிப்பிடப்படுதல் வேண்டும். இக் கூடு அதிகபட்சம் *15* இலக்கங்களை கொண்டிருத்தல் வேண்டும். *(2* தசமங்கள் அடங்கலாக*).*

*11. **நி.வை.வ/ மு.வ.வ சான்றிதழ் இலக்கம்*** – நிறுத்திவைக்கப்பட்டிருப்பவருக்கு உங்களால் வழங்கப்பட்ட நிறுத்திவைத்தல் வரி/ முற்பண வருமான வரி சான்றிதழின் இலக்கம் இங்கே குறிப்பிடப்படுதல் வேண்டும். இந்த கூடு அதிகூடியதாக *30* இலக்கங்களை மாத்திரமே கொண்டிருத்தல் வேண்டும்.
நிறுத்திவைக்கப்பட்டவருக்கு நி.வை.வ/ மு.வ.வ சான்றிதழை நீங்கள் வழங்கவில்லை எனில், இக் கூடு வெறுமையாக இருத்தல் வேண்டும்.

*குறிப்பு V : பங்குதாரர்களின் எண்ணிக்கை 1000 இனை விட அதிகமாயின், விபரங்களை தனி பதிவாக வெளிப்படுத்தலாம்.*

ஏதேனும் பிரச்சனைகளுக்கு முகம் கொடுப்பீர்களாயின்;

- **மேலதிக தெளிவுபடுத்துகைக்கு:** 1944 இனை அழுத்தி உள்நாட்டு இறைவரி திணைக்கள அழைப்பு நிலையத்துடன் தொடர்புகொண்டு உதவியை நாடலாம் அல்லது குரல்பதிவொன்றை மேற்கொண்டு சிட்டை இலக்கத்தைப் பெற்றுக்கொள்ளலாம் அல்லது callcentreservice@ird.gov.lk இற்கு மின்னஞ்சல் ஒன்றை அனுப்பலாம்.

- நி.வை.வ. வரி வகையினை பதியவும் செயற்படுத்தவும் கீழ்வரும் இணைப்பை பயன்படுத்தவும். http://www.ird.gov.lk/en/Lists/Latest%20News%20%20Notices/Attachments/489/Tax%20Type%20Registration-Activation-%20English.pdf
- இ-சேவைக்கான துரித வழிகாட்டியை பார்க்கவும்.